## இயக்குனர்கள் பாரதிராஜா – கே.பாக்யராஜ் நினைவாக

# “இராஜகோபுரங்களின் நினைவு உற்சவம்!” பிரம்மாண்ட விழா!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் புகழுரை!





சென்னை, ஆக.18 -

சென்னை கலைவாணர் அரங்கத்தில், மறைந்த இயக்குனர்கள் பாரதிராஜா மற்றும் கே.பாக்யராஜ் ஆகியோரின் நினைவாக, ‘ராஜ கோபுரங்களின் நினைவு உற்சவம்’ என்ற பிரம் மாண்ட விழா நேற்று முன்தினம் நடைபெற் றது. இந்நிகழ்ச்சியில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று புகழுரை யாற்றினார். விழாவில் திரையுலகைச் சேர்ந்த பிரபலங்கள் பலரும் கலந்துகொண்டு புகழ்மாலை சூட்டினர்.

கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட் டப்பேரவை எதிர்க்கட்சிச் தலைவருமான உத யநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:-

‘திரைக்கதை மன்னன்’ பாக்யராஜ் சார், ‘இயக்குனர் இமயம்’ திரு பாரதிராஜா சார் ஆகி யோரின் நினைவைப் போற்றுகின்ற வகையில், இந்த நிகழ்ச்சி மிகவும் உணர்வுப்பூர்வமாக இன் றைக்குக் காலையில் தொடங்கி இரவு வரை நடைபெற்று வருகின்றது. அவர்கள் இரண்டு பேர் மீதும் நமக்கு இருக்கக்கூடிய அன்பு மற்றும் மரியாதையின் வெளிப்பாடாகத்தான், இன் றைக்கு இந்த நிகழ்ச்சி இவ்வளவு சிறப்பாக ஏற் பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**உங்களில் ஒருவன்**

இன்றைக்குக் காலையில் ‘கலைஞானி’ கமல் சார் அவர்கள் இந்த நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். இதன் பிறகு, இன்றிரவு சூப்பர் ஸ்டார் ரஜினி சார் அவர்கள் இந்த நிகழ்ச்சியில் நிறைவுரையாற்ற இருக்கிறார். இன் றைக்கு ஒட்டுமொத்த திரையுலகமும் திரண்டி ருக்கின்ற இந்த நினைவுகூர்கின்ற நிகழ்ச்சியில், நான் பங்கேற்கின்ற வாய்ப்பைக் கொடுத்த மைக்கு நான் மீண்டும் என் நன்றியைத் தெரிவித் துக் கொள்கின்றேன்.

இந்த நிகழ்ச்சியில் நானும் உங்களில் ஒருவ னாக, இந்தத் திரைத் துறையில் ஒரு சில நாட்கள் பணிபுரிந்த ஒருவனாக அந்த உரிமையுடன் நான் கலந்து கொண்டிருக்கிறேன்.

**இயக்குனர் இமயம் பாரதிராஜா**

தமிழ் சினிமாவைப் பொறுத்தவரைக்கும், அது பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வடி வங்களாக மாறிக்கொண்டே இருந்தது. பேரறி ஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர் கள், தங்களின் திரைக்கதை வசனம் மூலமாக தமிழ் சினிமாவின் போக்கையே மாற்றிக் காட் டினார்கள். அவர்களின் வரிசையில் சினிமாவின் மொழியை எல்லோருக்குமானது என்று ஆக்கி யவர்கள், அதை இன்னும் அடுத்த கட்டத்துக்கு எடுத்துக்கொண்டு சென்ற இரண்டு பேர்தான் பாரதிராஜா சார் அவர்களும், பாக்யராஜ் சார் அவர்களும்.

பாரதிராஜா சார் அவர்களைப் பொறுத்தவ ரைக்கும், அவர்தான் முதன்முதலில் கேமராவை கிராமங்களுக்கும் வயல்வெளிக்கும் எடுத்துக் கொண்டு சென்றவர். குறிப்பாக, அவருடைய ‘வேதம் புதிது’ திரைப்படத்தில், திராவிட இயக் கத்தின் கொள்கையான சாதி ஒழிப்பையும், சமூக நீதியையும் உரக்கப் பேசினார். எனக்கு சின்ன வயதிலிருந்து திரு பாரதிராஜா அவர் களை நன்றாகத் தெரியும். பல பேருக்கு அது தெரியாது. அதற்குக் காரணம், அவர் மகன் மறைந்த மனோஜ் அவர்கள். மனோஜ் அவர்கள் என் பள்ளிக்கூட நண்பர். டான் பாஸ்கோ பள் ளியில் நானும் மனோஜ் அவர்களும் கிட்டத் தட்ட மூன்று வருடங்கள் ஒன்றாகப் படித் தோம், வகுப்பறை நண்பர்கள் (Classmates).

இன்றைக்கு மனோஜ் அவர்களும் நம்மோடு இல்லை, பாரதிராஜா சார் அவர்களும் நம் மோடு இல்லை. அவர்கள் விட்டுச் சென்ற நினை வுகள் என்றுமே நம் மனதில் நிலையாக இருக் கின்றன. கலைஞர் அவர்கள் மீது பாரதிராஜா சார் அவர்களுக்கு மிகப்பெரிய அன்பும் பாச மும் உண்டு. கலைஞர் அவர்களும் பாரதிராஜா சாருடைய படைப்புகளை மிகவும் ரசித்துப் பார்த்திருக்கிறார்கள், பாராட்டி இருக்கிறார் கள். எங்களுடைய கழகத் தலைவர் அவர்களும் அப்படித்தான்.

2022இல் பாரதிராஜா சார் மருத்துவமனை யில் சிகிச்சை முடித்து வீடு திரும்பியிருந்த சம யத்தில், அன்றைக்கு முதலமைச்சராக இருந்த எங்கள் தலைவர் அவர்கள், சாருடைய வீட் டிற்கே சென்று அவரிடம் நலம் விசாரித்தார்கள். தமிழ் சினிமாவின் போக்கை மாற்றியது மட்டு மில்லாமல், தமிழ் சினிமாவை இந்திய சினிமா வுக்கான உலக அடையாளமாக ஆக்கியவர்தான் திரு பாரதிராஜா சார். அவருடைய மறைவு இந் திய திரையுலகிற்கே ஒரு மிகப்பெரிய பேரிழப்பு.

**திரைக்கதை மன்னன் கே.பாக்யராஜ்**

அதேபோலத்தான் கே.பாக்யராஜ் சார் அவர் களும். பாரதிராஜா சாருடைய சீடராகத் தன் னுடைய திரைப்படப் பணிகளைத் தொடங்கி, ‘திரைக்கதை மன்னன்’ என்று இந்தியா முழுவ தும் பாராட்டைப் பெற்றவர்தான் திரு பாக்ய ராஜ் சார் அவர்கள். பாக்யராஜ் சாருடைய படங்கள் நடுத்தர வர்க்க மக்களின் வாழ்க் கையை அப்படியே சினிமாவில் பார்க்கின்ற மாதிரி ஒரு உணர்வை அனைவருக்கும் ஏற்படுத் தியது. அதுமட்டுமில்லாமல், யாருமே பேசத் தயங்குகின்ற சப்ஜெக்ட்டை எல்லாம் மிகவும் சுவாரசியமாக, யாரும் முகம் சுளிக்காதவாறு அனைவரும் ரசிக்கும்படி சினிமாவில் பேசிய வர் பாக்யராஜ் சார் அவர்கள்.

திரைக்கதை, இயக்கம், நடிப்பு, இசை, தயா ரிப்பு என்று எல்லா துறைகளிலும் பாக்யராஜ் சார் தன் திறமையைக் காட்டியவர். அதுமட்டு மில்லாமல், ஒரு சிறந்த பத்திரிகையாளராகவும் எழுத்தாளராகவும் தனிமுத்திரையைப் பதித் தார்.

பாக்யராஜ் சார் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களுக்குத்தான் மிகவும் நெருக் கம் என்று பல பேருக்குத் தெரியும். ஆனால், பாக்யராஜ் சார் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு மட்டு மல்ல, டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் மிகுந்த நெருக்கமான பழக்கம் உடையவர். அதனால் தான் எம்.ஜி.ஆர் அவர்களின் மறைவுக்குப் பிறகு, கலைஞர் அவர்களைத் தன்னுடைய தலைவராக ஏற்றுக்கொண்டு, திராவிட முன் னேற்றக் கழகத்தில் இணைந்து பணியாற்றினார்.

ஒரு கட்டத்திற்குப் பிறகு அரசியலிலிருந்து விலகியிருந்தாலும், எங்களுடைய தலைவர் அவர்களிடம் எப்பொழுதும் அதே பாசத்துடன் பழகியவர் பாக்யராஜ் சார் அவர்கள். பாக்ய ராஜ் சார் அவர்களுக்கு சமீபத்தில், இதே அரங் கத்தில் 50ஆம் ஆண்டு விழா எடுத்தபொழுது, எங்கள் தலைவர் அவர்கள் கலந்துகொண்டு பாக் யராஜ் சாரைப் பாராட்டிப் பேசினார். அப்ப டிப்பட்ட நம்முடைய ‘திரைக்கதை மன்னன்’ பாக்யராஜ் சாருடைய கலைப்பயணம் என் றைக்கும் நம் அத்தனை பேர்களின் மனதிலும் நிலைத்து நிற்கும்.

**மாபெரும் திரை ஆளுமைகள்**

‘இயக்குனர் இமயம்’ பாரதிராஜா சார், ‘திரைக்கதை மன்னன்’ பாக்யராஜ் சார் என் கின்ற இந்த இரண்டு மாபெரும் திரை ஆளுமை கள் நேற்றைக்கு, இன்றைக்கு மட்டுமல்ல, என் றைக்குமே தமிழ் சினிமாவின் அடையாளமாக நிச்சயம் திகழ்வார்கள். அவர்களுடைய புக ழைப் போற்றுவோம் என்று சொல்லி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாள ரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவரு மான உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

---

## இல. மேகநாதன் முன்னிலை! 93வது பிறந்தநாளையொட்டி

# திருக்குவளையில் முரசொலிமாறன் சிலைக்கு மரியாதை!

## என்,கௌதமன் தலைமையில் – கழகத்தினர் மாலை அணிவித்தனர்!

கீழ்வேளூர், ஆக. 18 –

நாகப்பட்டினம் மாவட்டம் திருக் குவளையில் முத்தமிழறிஞர் கலை ஞர் அவர்களின் மனசாட்சியாக விளங்கிய மறைந்த ஒன்றிய முன் னாள் அமைச்சர் முரசொலி மாற னின் அவர்களின் 93வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது சிலைக்கு கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி னார்கள்

நாகப்பட்டினம் மாவட்டம் திருக் குவளையில் முத்தமிழறிஞர் கலை ஞர் அவர்கள் பிறந்த இல்லம் உள் ளது. கலைஞர் இல்லம் கலைஞ ரின் தந்தை பெயரில் முத்துவேலர் நூலகமாகவும், தாயார் பெயரில் அஞ்சுகம் படிப்பகமாகவும் உள் ளது. இந்த இல்லத்தில் கலைஞ ருக்கு மார்பளவு வெண்கல சிலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் கலைஞரின் தந்தை

முத்துவேலர், தாயார் அஞ் சுகம், முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் ஆகி யோருக்கும் சிலைகள் அமைக்கப் பட்டுள்ளது.

கலைஞர் இல்லத்தில் பிறந்த முரசொலிமாறனுக்கு வைக்கப்பட் டுள்ள சிலைக்கு அன்னை அஞ்சு கம் அறக்கட்டளை உறுப்பினரும், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன் முன்னிலையில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கழ கத்தினர் மாலை அணிவித்து மரி யாதை செலுத்தினார்கள்.

முன்னதாக கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் தலைமை செயற் குழு உறுப்பினர் ப.,கோவிந்தரா சன், மீனவரணி மாநில துணை செயலாளர் இரா.மனோகரன், ஒன் றிய செயலாளர்கள் சோ.பா.மலர் வண்ணன், மகா.குமார், ஆ.தாமல் ஆல்வாஎடிசன், கே. பழனியப்பன், நாகை நகர கழகச் செயலாளர் இரா. மாரிமுத்து, வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரியசார்லஸ், பொதுக்குழு உறுப்பினர் கோ. சிவக்குமார், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பா ளர் அ.பாரிபாலன், தொழிலாளர் அணி மாவட்ட தலைவர் என். மோகன்தாஸ், மாவட்ட சார்பு அணி களின் துணை அமைப்பாளர்கள் பி.தியாகராஜன், எஸ்.செல்வா, மா.செந்தில், குவளைகணேசன், சண்முகநாதன், ஒன்றிய இளை ஞர் அணி கார்த்தி, குமார், கீழையூர் கிழக்கு ஒன்றிய அலைத்தலைவர் வை.சண்முகசுந்தரம், நாகை தெற்கு ஒன்றிய துணைச் செயலா ளர் திருநாவுக்கரசு, ஒன்றிய குழு முன்னாள் உறுப்பினர் சுதா ஊராட்சி மன்ற முன்னாள் தலை வர்கள் தனபால், கலைச்செல்வன் கலைஞர் இல்ல பாதுகாப்பாளர் தியாகராஜன் உள்ளிட்ட ஏராளமா னோர் கலந்து கொண்டு முரசொலி மாறன் சிலைக்கு மாலை அணி வித்து மரியாதை செலுத்தி னார்கள்.

---

## காஞ்சிபுரம் பொன்னேரிக்கரையில்

# புதிய பேருந்து நிலையம் அமைக்க உச்சநீதி மன்றம் அனுமதி!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் தலைமையில் கொண்டாட்டம்!

காஞ்சிபுரம், ஆக.18,

காஞ்சிபுரம் பொன்னேரிக்கரை பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான உச்சநீதிமன்றம் சாதகமான தீர்ப்பு வழங்கியதைத் தொடர்ந்து மாவட்டக் கழகச் செயலா ளர் க.சுந்தர் தலைமையில் கழகத்தி னர் அண்ணா சிலைக்கு மாலை அணி வித்தும், பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கிமும் கொண்டாடினர்.

காஞ்சிபுரம் மாநரில் போக்குவ ரத்து நெரிசலைக் குறைக்க காஞ்சிபு ரம் அருகே சென்னைபெங்களூரு தேசிய நெடுஞ்சாலை பொன்னேரிக் கரையில் உள்ள 19 ஏக்கர் இடத்தில் ரூ.35 கோடி மதிப்பில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்காக மாவட்ட நிர்வாகம், மாநகராட்சி நிர்வாகம் சார் பில் இடம் தேர்வு செய்யப்பட்டது. அந்த இடம் கல்லூரிக்கு சொந்தமாக இருப்பதாக வழக்கு உச்சநீதிமன்றம் வரை சென்றது.

இவ்வழக்கு உச்சநீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், நீதி மன்ற சட்ட போராட்டத்தில் பல ஆண் டுகளுக்குப் பிறகு 13.8.2028 வெள் ளிக்கிழமை தனியார் கல்வி நிறுவ னம் அளித்த வழக்கை தள்ளுபடி செய்தது உச்சநீதிமன்றம்.

இதனைத் தொடர்ந்து பல ஆண் டுகளுக்கும் மேலாக புதிய பேருந்து நிலையம் அமைக்க போராடி வந்த நிலையில் அதற்கு நிரந்தர தீர்வு கிடைத்ததால் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் தலைமையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலசரன், மாநகர மேயர் மகாலாட்சுமி யுவராஜ் ஆகியோர் முன்னிலையில் புதிய பேருந்து நிலையத்திற்கு வரவேற்பு அளிப்பு நிகழ்ச்சியாக 14.8.2026 சனிக்கிழமை அன்று காஞ்சிபுரம் பழைய மாநகராட்சி அலுவலம் முன்பு நடந்தது.

இதில் 1000 க்கும் மேற்பட்ட கழகத் தினர் பங்கேற்று பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும்,பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித் தும் மரியாதை செலுத்தி மகிழ்ந்தனர்.

பின்னர் முன்னாள் எம்.எல்.ஏ. கூசுந்தர் செய்தியாளர்களிடம் கூறிய தாவது: 2021 இல் முத்துவேல் கரு ணாநிதி ஸ்டாலின் தலைமையில் அமைந்த திராவிட மாடல் ஆட்சியில் காஞ்சிபுரம் பெருநகராட்சியாக இருந் ததை மாநகராட்சியாக தரம் உயர்த்தி புதிய பேருந்து நிலையம் அமைப்ப தற்கு நிதியும் ஒதுக்கி, அரசு நிதியில் மேற்கொள்ள இடம் தேர்வு செய்யப் பட்டு பணிகளும் தொடங்கப்பட்டது.

இந்நிலையில் பேருந்து நிலையம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து, கல்வி அறக்கட்டளை தொடர்ந்த வழக்கில் இரு நாட்களுக்கு முன்பு உச்சநீதிமன் றம் அந்த வழக்கை தள்ளுபடி செய்து பேருந்து நிலையம் அமைத்து கொள்ள ஆணையும் பிறப்பித்தது.

இது முழுக்க, முழுக்க திராவிட மாடல் ஆட்சியில் கொண்டு வரப் பட் டது. இது யாரும் மறுக்கவும் முடியாது. சொந்தம் கொண்டாடவும் முடியாது. இது மட்டுமல்லாமல் காஞ்சிபுரம் மாந கராட்சியில் பாதாள சக்கடை திட்டம், மாநராட்சி புதிய கட்டிடம், அன்னை அஞ்சுகம் உள்ளிட்ட பல்வேறு திட்டங் களையும் திராவிட மாடல் ஆட்சிதான் அமைத்து கொடுத்தது. இவ்வாறு க. சுந்தர் கூறினார்.

இதனையடுத்து மாநில கொள்னை பரப்புச் செயலாளரும் முன்னாள் எம்.எல்.ஏ.வுமான சி.வி. எம்.பி. எழிலரசன் கூறுகையில், புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான அனைத்து பணிகளும் கடந்த தி.மு.க. ஆட்சியில் மேற்கொள்ளப்பட்டது. நீதி மன்றத்தை நாடி புதிய பேருந்து நிலை யம் அமைக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியிருப்பதற்கு முழு காரணமும் கடந்த தி.மு.க. அரசுதான். ஆனால் இன்றைக்கு த.வெ.க. தலைவர் விஜய் தலைமையிலான ஆட்சியினால் தான் இது சாத்தியமானது என கூறுவது ஏற் புடையதல்ல. ஊரான் பிள்ளைக்கு த.கெ. பெயர் வைப்பதா? என்றார்.

இந் நிகழ்வில் மாவட்டப் பொருளா ளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், வர்த் தக அணி மாநில துணைச் செயலா ளர் வி.எஸ்.இராமகிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பா ளர் யுவராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார், பொதுக் குழு உறுப்பினர்கள் எஸ்.கே.பி. சீனி வாசன், சிகாமணி, தலைமை நிலைய பேச்சாளர் நாத்திகம் நாகராசன், ஒன் றியச் செயலாளர்கள் பி.எம்.குமார், குமணன், பகுதிச் செயலாளர்கள் எஸ்.சந்துரு, கே.திலகம், தசரதன், வெங்கடேசன், மகளிர் அணி தலைவி செல்வி, மண்டலக் குழுத் தலைவர் கள் செவிலிமேடு மோகன், சாந்தி சீனிவாசன், மாநகராட்சி கவுன்சிலர் கள் சுரேஷ், கமலக்கண்ணன், கார்த் திக் உள்ளிட்ட ஏரானமானவர்கள் கலந்து கொண்டனர்.

---

# உன் பிறந்த நாள்! தமிழர்க்குச் சிறந்தநாள்!



மன்னர்மா மன்னர்தம் அரண்மனை மாடத்தில்
மகனாய்நீ தோன்ற வில்லை!
மாணிக்கத் தொட்டிலில் தாலாட்டுக் கேட்டுநீ
மணிவிழி மூட வில்லை!
தென்னவர் குலம்போற்றும் இசைவாணர் குடும்பத்தில்
செல்வமே பிறந்து வந்தாய்!
சேயான நாள்முதல் "தாய்மாமன்" தோளிலே
சிட்டுப்போல் தவழ்ந்து வந்தாய்!
பொன்மேனி வாடாமல் உன்னைத்தன் நெஞ்சுக்குள்
பொத்தியே அவர்வ ளர்த்தார்!
புகழ்மாலை சூடிநீ உலகத்தை வலம்வரப்
பொழுதெலாம் "கனா"வ ளர்த்தார்!
கன்னலில் கனிச்சாற்றில் மூழ்கிடும் வண்டுபோல்
கல்வியில் திளைக்க வைத்தார்!
"கண்ணா!நீ வாழ்க!"என அண்ணாவே உனைத்தேர்தல்
களத்திலே குதிக்க வைத்தார்!

எய்தாய்நீ இலக்கினை! வடக்குநம் தெற்கினை
ஏற்குமோர் வழிவ குத்தாய்!
ஏடாளும் வேந்தனாய் நாடாளு மன்றத்தில்
இலக்கணம் நீப டைத்தாய்!
மையத்தில் குவிந்துள்ள அதிகாரம் பற்றிநீ
மகத்தான நூல்வ டித்தாய்!
"மாநில சுயாட்சி"யின் உள்ளார்ந்த மாண்பினை
மாற்றாரும் உணர வைத்தாய்!
வையத்தில் வளர்ந்துவரும் நாடுகள் சார்பிலே
வாதாடி வெற்றி பெற்றாய்!
வாகான உரையினால் "தோகா"வின் மாநாட்டு
வரலாற்றில் நிலைத்து விட்டாய்!
செய்தக்கச் செய்கின்ற சான்றாண்மை மிக்கநின்
சீர்த்தியால் கீர்த்தி பெற்றாய்!
"திருவாரூர் மண்வாசம், திருக்குவளை மலர்வாசம்"
திக்கெட்டும் கமழச் செய்தாய்!

தந்தை,தாய் வழிவந்த அன்பன்றோ! "உன்மாமன்"
தமிழ்தந்த அறிவும் அன்றோ!
" தாத்தாவும் பாட்டியும்" வீரத்தை ஈர்த்தைத்
தரவந்தப் பொலிவும் அன்றோ!
சிந்தனை நெற்றியின் மடிப்புகள் ஒவ்வொன்றும்
செயலுக்கு வியூகம் அன்றோ!
சிங்கம்நிகர் நடைகாணக் கண்கோடி வேண்டுமே!
" திராவிடத் தீரம்" அன்றோ!
சந்தன நிறமன்றோ! தங்கத்தின் ஒளியன்றோ!
தனிஎழில் வதனம் அன்றோ!
" தலைவகிடு" அதில்கூடத் தலைவனைப் பின்பற்றும்
தலைமுடி அழகும் அன்றோ!
சுந்தரம் என்றாலே அழகென்று பொருள்என்று
சொல்வார்கள்! "தியாக ராஜ
சுந்தரம்" நீயன்றோ!அழகுக்கே அழகூட்டச்
சொல்தேவை இல்லை யன்றோ!

கலைஞரின் வளர்ப்புநீ! கலைஞரின் வார்ப்புநீ!
கலைஞரின் "ஞான நகல்"நீ!
கலைஞரை ஆயிரம் கவிஞர்கள் பாடலாம்!
கலைஞரின் பாடு பொருள்நீ!
கலைஞரின் நம்பிக்கை! கலைஞரின் மனசாட்சி!
கலைஞரின் மூளை பலம்நீ!
கடல்போலப் படைநூறு வந்தாலும் கலைஞர்க்குக்
களத்திலே யானை பலம்நீ!
அலையில்நீர்க் குமிழிபோல் இடையில்நீ பிரிந்ததை
அன்றாடம் எண்ணு கின்றோம்!
அருகில்நீ இல்லாத கலைஞரைப் பார்க்க,மனம்
ஆற்றாமல் விம்மி நின்றோம்!
சிலைமுன்னம் நின்றுநின் புகழ்வாழ்க! என்றுமனம்
சிலிர்த்தெழ முழங்கு கின்றோம்!
"சிறந்தநாள்! தமிழர்க்குன் பிறந்தநாள்!" என்றுன்னைச்
சிரம்தாழ்த்தி வணங்கு கின்றோம்!



**கவிச்சுடர் கவிதைப்பித்தன்**



திருவாரூர் நகரப் பகுதி, 29 வது வார்டில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட வீடுகளையும் அந்த குடும்பத்தின ரையும் நேரில் சந்தித்த மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தேவையான உடனடி உதவிகளை அவர்களுக்கு அளித்து ஆறுதல் கூறினார். உடன் நகர செயலாளர் வாரை. எஸ். பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.